வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 22.3.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் டோப்கே ஆகியோர் முன்னிலையில், திம்புவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இருநாடுகளுக்கும் இடையே, பல உடன்பாடுகள் கையெழுத்தாயின.

மக்களவை தேர்தல் தொடர்பாக சென்னையில் நாளை, அனைத்து கட்சிகளுடன் ஆலோசனை கூட்டம் நடைபெறும் என்று, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

ஜார்கண்ட் மற்றும் தெலங்கானா ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், புதுச்சேரி துணை நிலை ஆளுநராக இன்று மாலை பதவி ஏற்கிறார்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான, மூன்றாம் நாளான இன்று, எவரும் மனு தாக்கல் செய்யவில்லை.

மோடி-பூட்டான்

பிரதமர் திரு நரேந்திர மோடி, பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் டோப்கே ஆகியோர் முன்னிலையில் பூட்டான் தலைநகர் திம்புவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இருநாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் பல உடன்பாடுகள்

கையெழுத்தாயின. எண்ணெய் விநியோகம், எரிசக்தி சேமிப்பு, விளையாட்டு உள்ளிட்ட துறைகள் இதில் அடங்கும்.

முன்னதாக 2 நாள் அரசு முறைப் பயணமாக இன்று காலை பூட்டான் சென்று சேர்ந்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு, பாரோ சர்வதேச விமான நிலையத்தில், பூட்டான் பிரதமர், சம்பிரதாய வரவேற்பு அளித்தார். இப்பயணத்தின் போது பூட்டான் மன்னர் ஜிக்மே நாம்கியேல் வாங்சுக், அவருக்கு முந்தைய மன்னர் ஜிக்மே சிங்கியே வாங்சுக் ஆகியோரை, பிரதமர் திரு நரேந்திர மோடி சந்திக்கிறார். திம்புவில் இந்தியாவின் உதவியுடன் கட்டப்பட்டுள்ள, அதிநவீன மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை ஒன்றை நாளை அவர் திறந்து வைக்கிறார். சுகாதாரம், கல்வி, டிஜிட்டல் மயம், நிதி தொழில் நுட்பம், நீர் மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பூட்டான் நாட்டின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இந்தியா உதவி வருவதும் குறிப்பிடத் தக்கது.

மோடி-நீர்வளம்

நீரே வாழ்க்கையின் உயிர் நாடி என்றும், விலை மதிப்பற்ற நீர் வளத்தை பாதுகாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாகவும், பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று உலக தண்ணீர் தினத்தை ஒட்டி, இன்று அவர் வெளியிட்டுள்ள செய்தியில், நீடித்த நீர் மேலாண்மைக்கு அரசு பாடுபட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

மோடி-பீகார்

இன்று பீகார் மாநிலத்தின் 112-ஆவது உதய நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர், அம்மாநில மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். வரலாற்றுக் காலத்தில் இருந்தே, இந்தியாவின் கல்வி-கலாச்சார மையமாக திகழ்வது பீகார் என்றும், பீகார் மக்கள், மன உறுதி மற்றும் தியாகத்திற்கு பெயர் பெற்றவர் என்றும் குடியரசு தலைவர் கூறி உள்ளார். பீகாரின் கலாச்சார பாரம்பரியத்தையும், நாட்டிற்கான பீகார் மக்களின் முக்கிய பங்களிப்புகளையும் அனைவரும் கொண்டாட வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் கூறி உள்ளார். கலாச்சார மரபுகளுக்காக உலக அளவில் தனிப் பெயர் பெற்றுள்ள பீகார் தற்போது, வளர்ச்சியின் புதிய யுகத்தை நோக்கி நகர்ந்து வருவதாகவும், முன்னேறிய சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்குவதில் பீகார் மக்களின் கடின உழைப்பு, முக்கிய பங்களிக்கும் என்றும், பிரதமர் திரு நரேந்திர மோடி தமது செய்தியில் கூறி உள்ளார்.

கெஜரிவால்

டெல்லி அரசின் கலால் கொள்கை தொடர்பான வழக்கில் நேற்று இரவு கைது செய்யப்பட்ட டெல்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜரிவாலை, அமலாக்கப் பிரிவு அதிகாரிகள் இன்று, டெல்லி ரோஸ் அவென்யு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, 10 நாள் காவலில் எடுக்க அனுமதி கோரினர். இதற்கிடையே, திரு கெஜரிவால் தாம் கைது செய்யப்பட்டதை

ஆட்சேபித்து உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை பின்னர் விலக்கிக் கொண்டார். இதே வழக்கில் கைது செய்யப்பட்ட, மூத்த BRS தலைவர் திருமதி கவிதாவின் இதே போன்ற மனுவை விசாரணைக்கு ஏற்க, முன்னதாக இன்று காலை, உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டதைத் தொடர்ந்து, திரு கெஜரிவால் தமது மனுவை வாபஸ் பெற்றார். இனி அவர் கீழ் நீதிமன்றத்தை நாடுவார் என்று அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

பொன்முடி

தமிழகத்தில் அமைச்சராக, திரு க பொன்முடி இன்று மீண்டும் பதவி ஏற்றார். சென்னை ஆளுநர் மாளிகையில் இன்று பிற்பகல் நடைபெற்ற பதவி ஏற்பு நிகழ்ச்சியில் ஆளுநர் திரு ஆர் என் ரவி, திரு பொன்முடிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அமைச்சர் திரு பொன்முடிக்கு உயர் கல்வித் துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு

தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதா சாகு, மக்களவை தேர்தல் தொடர்பாக சென்னை தலைமைச் செயலகத்தில் நாளை அனைத்து கட்சிகளுடன் ஆலோசனை நடத்துகிறார். தேர்தலை அமைதியான முறையில் நடத்துவது தொடர்பாக அரசியல் கட்சிகளின் கருத்துக்களும், ஆலோசனைகளும் இக்கூட்டத்தில் கேட்டறியப்பட்டு, தேர்தல் ஆணையத்திடம் தெரிவிக்கப்படும் என்று அவர் கூறி உள்ளார். இதற்கிடையே, திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான திரு மு க

ஸ்டாலின் இன்று மாலை திருச்சி மாவட்டம் சிறுகனூரில் இருந்து மக்களவை தேர்தலுக்கான தனது தேர்தல் பிரச்சாரத்தை தொடக்குகிறார். மாநிலம் முழுவதும் வரும் 17-ஆம் தேதி வரை அவர் பிரச்சாரத்தில் ஈடுபடுவார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, அஇஅதிமுக பொதுச் செயலரும், தமிழக முன்னாள் முதலமைச்சருமான திரு எடப்பாடி பழனிசாமி இன்று சென்னையில் மக்களவைத் தேர்தலுக்கான அஇஅதிமுக-வின் தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளார். பெண்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் மாதாந்திர உதவி, நீட் தேர்வுக்கு பதிலாக மாற்று முறை உட்பட 133 தேர்தல் வாக்குறுதிகள் இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. திரு எடப்பாடி பழனிசாமி நாளை மறுநாள் திருச்சியில் இருந்து தமது தேர்தல் பிரச்சாரத்தை தொடக்குவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*தமிழ்நாடு-பட்டியல்*

தமிழகத்தில் 9 மக்களவை தொகுதிகளுக்கான பாமக வேட்பாளர் பட்டியல் இன்று வெளியாகி உள்ளது. இதன்படி, விழுப்புரம் தொகுதியில் திரு முரளி சங்கர், கள்ளக்குறிச்சியில் திரு தேவதாஸ் உடையார், மயிலாடுதுறையில் திரு ம. க ஸ்டாலின் ஆகியோர் பாமக வேட்பாளர்களாக போட்டி இடுகிறார்கள். கடலூர் மக்களவை தொகுதியில் திரு தங்கர் பச்சான் பாமக வேட்பாளராக அறிவிக்கப் பட்டுள்ளார். காஞ்சிபுரம் தனித் தொகுதிக்கான பாமக வேட்பாளர் பெயர் பின்னர் வெளியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் 5 மக்களவை

தொகுதிகளுக்கான தேமுதிக வேட்பாளர் பட்டியலும் இன்று வெளியாகி உள்ளது. இதன்படி மத்திய சென்னையில் திரு பார்த்தசாரதி, கடலூரில் திரு சிவக் கொழுந்து ஆகியோர் தேமுதிக வேட்பாளராக அறிவிக்கப் பட்டுள்ளனர். விருதுநகர் மக்களவை தொகுதியில் திரு விஜய பிரபாகரன் தேமுதிக வேட்பாளராக போட்டியிடுகிறார்.

*ராதாகிருஷ்ணன்*

ஜார்கண்ட் மற்றும் தெலங்கானா ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், புதுச்சேரி துணை நிலை ஆளுநராக இன்று மாலை பதவி ஏற்கிறார். மாலை 7.30 மணிக்கு புதுச்சேரி ராஜ்நிவாசில் நடைபெறும் பதவி ஏற்பு விழாவில், அவருக்கு, சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி, பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

தெலங்கானா ஆளுநர் மற்றும் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் பதவியில் இருந்து, டாக்டர் தமிழிசை சவுந்தரராஜன் ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து, இவ்விரு பொறுப்புகளும், ஜார்கண்ட் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணனிடம் கூடுதல் பொறுப்புகளாக ஒப்படைக்கப்பட்டன. திரு சி பி ராதாகிருஷ்ணன், ஐதராபாத் ராஜ்பவனில் நேற்று முன் தினம் நடைபெற்ற நிகழ்ச்சியில், தெலங்கானா ஆளுநராக கூடுதல் பொறுப்பேற்றார்.

இதைத் தொடர்ந்து இன்று காலை புதுச்சேரி விமான நிலையத்தில் வந்திறங்கிய திரு சி பி ராதாகிருஷ்ணனை, முதலமைச்சர் திரு ரங்கசாமி,

சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன்- திரு ஜெயக்குமார்- திரு திருமுருகன், மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் தலைமைச் செயலர் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் வரவேற்றனர். தொடர்ந்து புதுச்சேரி ராஜ்நிவாசில் சிபி ராதாகிருஷ்ணனுக்கு, காவல்துறை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆளுநர் மாளிகையில், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்கள், அவருக்கு சாலை அணிவித்து வரவேற்றனர்.

பின்னர் திரு சி பி ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் பேசுகையில், 3 மாநிலங்களுக்கு ஆளுநராக தம்மை நியமித்துள்ள குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு> பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோருக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், இது தமிழர்களுக்கு கிடைத்த பெருமை என்றும் கூறினார்.

மக்களுக்கு நல்லது செய்வதே ஆளுநரின் கடமை என்றும், அதை நிறைவேற்றுவேன் என்றும் திரு சி வி ராதாகிருஷ்ணன் தெரிவித்தார். அரசியல் லாபத்திற்காக குறை சொல்பவர்களுக்கு பதில் தரப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். உலக அரங்கில் புதுச்சேரி நகரம் வளர்ச்சி அடைய இயன்ற எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்றும் கோப்புகளை தாமதப்படுத்தாமல் புதுச்சேரி அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அரசியல் சாசனத்திற்கு

எதிரான கோப்புகளுக்கு அனுமதி அளிக்க மாட்டேன் என்றும் அவர் கூறினார்.

*புதுச்சேரி வேட்பு மனு*

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான, மூன்றாம் நாளான இன்று, எவரும் மனு தாக்கல் செய்யவில்லை. தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகம் இன்று மாலை வெளியிட்ட செய்திக் குறிப்பில் இதைத் தெரிவித்துள்ளது. புதுச்சேரியில், வேட்பு மனு தாக்கலின் தொடக்க நாளான **நேற்று முன்தினம்** எவரும் மனுதாக்கல் செய்யாத நிலையில், இரண்டாம் நாளான நேற்று, சுயேட்சை ஒருவர் மனு தாக்கல் செய்தார்.

*நமச்சிவாயம்*

புதுச்சேரி மக்களவைத் தொகுதிக்கான பிஜேபி வேட்பாளராக, திரு நமச்சிவாயம் அறிவிக்கப்பட்டுள்ளார். புதுடெல்லியில் இன்று வெளியிடப்பட்ட, மக்களவை தேர்தலுக்கான பாரதிய ஜனதா கட்சியின் 4-ஆவது வேட்பாளர் பட்டியலில், அவரது பெயர் இடம் பெற்றுள்ளது. தமிழகத்தில் மேலும் 14 தொகுதிகளுக்கான பிஜேபி வேட்பாளர்களின் பெயர்களும், இப்பட்டியலில் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி, திருவண்ணாமலை தொகுதியில் திரு அஸ்வத்தாமன், சிதம்பரம் தனித் தொகுதியில் திருமதி கார்த்தியாயினி, நாகை தனித் தொகுதியில் திரு ரமேஷ், தஞ்சையில் திரு முருகானந்தம், வடசென்னையில் திரு பால் கனகராஜ் ஆகியோர் பிஜேபி வேட்பாளர்களாக போட்டியிடுகிறார்கள்.

விருதுநகர் மக்களவைத் தொகுதியில் திருமதி ராதிகா சரத்குமார், பிஜேபி வேட்பாளராக அறிவிக்கப் பட்டுள்ளார்.

*வாக்காளர்-விழிப்புணர்வு*

முறையாக வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்புக்கான தேர்தல் ஆணையத்தின் ஸ்வீப் திட்டத்தின் கீழ் இன்று புதுச்சேரியில் கிருமாம்பாக்கம் ராஜீவ்காந்தி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட உதவி ஆட்சியர் திரு யஷ்வந்த் மீனா தொடக்கி வைத்தார். முதல் முறையாக வாக்களிக்க தகுதி பெற்றுள்ள சுமார் 200 மாணவ-மாணவிகள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில், வாக்காளர் விழிப்புணர்வு குறித்து, மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள குறும்படம் திரையிடப்பட்டது. அனைவரும் வாக்களிக்கவும், வாக்களிப்பதில் மற்றவர்களை ஊக்குவிக்கவும், வாக்களிக்க பணம் வாங்க மாட்டேன் என்றும் மாணவ-மாணவிகள் உறுதி ஏற்றனர். கல்லூரியின் வாக்காளர் கல்விப் பிரிவு நோடல் அதிகாரி பேராசிரியர் ரமேஷ், நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

*ஐபிஎல்*

17-ஆவது இருபது ஓவர் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகள் சென்னையில் இன்று தொடங்குகின்றன. சென்னை எம்ஏ சிதம்பரம் விளையாட்டு அரங்கில் இன்று இரவு 8 மணிக்கு நடைபெறும் முதலாவது போட்டியில் சென்னை-பெங்களூர் அணிகள் மோதுகின்றன.

இஸ்ரோ

மறு பயன்பாட்டிற்கு ஏற்ற இந்தியாவின் புஷ்பக் - செயற்கைக் கோள் செலுத்து வாகனத்தை, இஸ்ரோ விஞ்ஞானிகள் இன்று கர்நாடக மாநிலம் சித்ரதுர்கா சல்லக்கெரே, பரிசோதனை தளத்தில் இருந்து வெற்றிகரமாக பரிசோதித்தனர். முற்றிலும் தானியங்கி முறையில் செயற்கைக் கோள் செலுத்து வாகனத்தை கச்சிதமாக தரையிறக்கிய விஞ்ஞானிகளுக்கு இஸ்ரோ தலைவர் டாக்டர் சோம்நாத் வாழ்த்து தெரிவித்துள்ளார். விண்வெளிக்கு சென்று திரும்பும் வகையிலான இப்புதிய செயற்கைக் கோள் செலுத்து வாகனத்தை, மீண்டும் மீண்டும் பயன்படுத்தி பல செயற்கைக் கோள்களை ஏவ முடியும் என்பதால், பெருமளவில் செலவு குறையும். இஸ்ரோ விஞ்ஞானிகளின் இந்த சாதனையை மத்திய தகவல்-ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர் பாராட்டி உள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் இந்தியா, விண்வெளி ஆராய்ச்சித் துறையில் புதிய எல்லைகளை எட்டி வருவதாக, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறி உள்ளார்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, பூட்டான் பிரதமர் திரு ஷெரிங் டோப்கே ஆகியோர் முன்னிலையில், திம்புவில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இருநாடுகளுக்கும் இடையே, பல உடன்பாடுகள் கையெழுத்தாயின.

மக்களவை தேர்தல் தொடர்பாக சென்னையில் நாளை, அனைத்து கட்சிகளுடன் ஆலோசனை கூட்டம்  நடைபெறும் என்று, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதா சாகு தெரிவித்துள்ளார்.

ஜார்கண்ட்  மற்றும் தெலங்கானா ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், புதுச்சேரி துணை நிலை ஆளுநராக இன்று மாலை பதவி ஏற்கிறார்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான, மூன்றாம்  நாளான இன்று,  எவரும் மனு தாக்கல் செய்யவில்லை.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 22.3.2024/Script/

---------------------------